ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

उदयति यदि भानुः पश्चिमे दिग्विभागे
विकसति यदि पद्मं पर्वतानां शिखाग्रे ।
प्रचलति यदि मेरुश्शीततां याति वह्निः
न चलति खलु वाक्यं सज्जनानां कदापि ॥ सुभाषिते ॥

𑌉𑌦𑌯𑌤𑌿 𑌯𑌦𑌿 𑌭𑌾𑌨𑍁𑌃 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇 𑌦𑌿𑌗𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑍇 𑌵𑌿𑌕𑌸𑌤𑌿 𑌯𑌦𑌿 𑌪𑌦𑍍𑌮𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌶𑌿𑌖𑌾𑌗𑍍𑌰𑍇 । 𑌪𑍍𑌰𑌚𑌲𑌤𑌿 𑌯𑌦𑌿 𑌮𑍇𑌰𑍁𑌶𑍍𑌶𑍀𑌤𑌤𑌾𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌵𑌹𑍍𑌨𑌿𑌃 𑌨𑌚𑌲𑌤𑌿 𑌖𑌲𑍁 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌸𑌜𑍍𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌕𑌦𑌾𑌪𑌿 ।

[𑌸𑍁𑌭𑌾𑌷𑌿𑌤𑍇

கதிரவன் மேற்குதிக்கில் உதித்தாலும் பங்கயம்பர்வதத்தினுடைய சிகரத்தின் நுனியில் உண்டாகி நன்கு மலர்ந்த மலரை தரித்தாலும் மகா மேருவென்கிற மலையானது சலித்தாலும் அக்னியானவன் சீதளத்தை அடைந்தாலும்மஹான்களுடைய வாக்கானது ஒருஸமயத்திலும் மாறுதலை அடையமாட்டாது.

எவர்களுக்கும் வாக்கில் சுத்தி அவசியம் இருக்கவேண்டும். வாக்சுத்தி என்றால் ஸத்தியத்தினின்றும் தவறாமலிருக்கவேண்டுமென்று பொருள். இதுதான் முக்யமான தர்மம். இதை ரக்ஷிக்கவேண்டுமென்றுதான் சூர்யவம்சத்தில் தோன்றிய அரிச்சந்திரன் என்கிற அரசன் நாடு நகரம் பெண்டீர் பிள்ளை முதலிய ஸகல வைபவங்களையுமிழந்து தானும் புலயனுக்கடிமையானார். மஹரிஷி விசுவாமித்திரர் இவரைப் பொய்யனாக்க வேண்டுமென்று பலவாறு முயற்சிசெய்தும் பயன்படவில்லை. முடிவில் ஸ்ரீசங்கரனே சகல தேவதைகளுடன் வந்து மன்னனைப் புகழ்ந்து வேண்டிய வரத்தையுமளித்து மறைந்தாரென்று புராணங்களில் பிரஸித்தம். இந்த ஒரு தர்மத்தைச் சரியாய் அனுஷ்டித்தபடியால்தான் பரமேச்வரன் தானாக வந்து அருள் புரிந்தார். தற்காலம் இந்த சுத்தியில்லாதபடியால் நேரும் கஷ்டங்கள் இவ்விதமென்று கூறவியலாது. பல ஜனங்கள் ஸத்யத்தைத் தவறவிட்டு இவ்வுலகில் கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள், பரலோகத்தில் நரகத்தையும் அடையப்போகிறார்கள். ஆகையால் எவ்வளவு சிரமம் நேர்ந்தாலும் ஸத்யத்தைக் கைவிடக்கூடாது என்று அறிவிக்கப்படுகின்றது.

உபபத்திராதிபர்.

# ஹரிஹராபேதம்.

(660-வது பக்கத்தொடர்ச்சி)

இவ்விஷயத்தை பாலர்கள் அறியமாட்டார்கள் என்று ஸ்ரீமஹாவிஷ்ணு மார்கண்டேயரிடம் கூறியிருக்கிறார்.

ஹரிவம்சத்தில்

अहं त्वं सर्वगो देव त्वमेवाहं जनार्दन ।
आवयोरन्तरं नास्ति शब्दैरर्थैर्जगत्पते ॥
नामानि तव गोविन्द यानि लोके महान्ति च ।
तान्येव मम नामानि नात्र कार्या विचारणा ॥
त्वदुपासा जगन्नाथ सैवास्तु मम गोपते ।
यश्च त्वां द्वेष्टि भो देव स मां द्वेष्टि न संशयः ॥

𑌅𑌹𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑍋 𑌦𑍇𑌵 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵𑌾𑌹𑌂 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ।
𑌆𑌵𑌯𑍋𑌰𑌨𑍍𑌤𑌰𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌶𑌬𑍍𑌦𑍈𑌰𑌰𑍍𑌥𑍈𑌰𑍍𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑍇 ॥
𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌤𑌵 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦 𑌯𑌾𑌨𑌿 𑌲𑍋𑌕𑍇 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌿 𑌚 ।
𑌤𑌾𑌨𑍍𑌯𑍇𑌵 𑌮𑌮 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌵𑌿𑌚𑌾𑌰𑌣𑌾 ॥
𑌤𑍍𑌵𑌦𑍁𑌪𑌾𑌸𑌾 𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥 𑌸𑍈𑌵𑌾𑌸𑍍𑌤𑍁 𑌮𑌮 𑌗𑍋𑌪𑌤𑍇 ।
𑌯𑌶𑍍𑌚 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌭𑍋 𑌦𑍇𑌵 𑌸 𑌮𑌾𑌂 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥

ஹே ஜநார்த்தனரே எங்கும் வியாபித்திருக்கும் நானே நீர். நீர் தானே நான். நம்மிருவர்களுக்கும் பெயர்களாலேயோ அர்த்தத்தினாலேயோ வேற்றுமை கிடையாது. ஹே கோவிந்தரே! உலகில் யாதொரு உம்முடைய நாமாக்களை மிகவும் சிறந்ததாகக் கொண்டாடுகிறார்களோ அவைகள் என்னுடைய நாமாக்கள் தான். இந்த விஷயத்தில் சங்கைகொண்டு விசாரிக்கவேண்டியதில்லை. ஹே ஜகந்நாத! ஸகல லோகங்களுக்கும் நாதரான ரமா

நாதனே! உம்மையுத்தேசித்து உலகில் செய்யப்படும் உபாஸனைகள் பூராவும் என்னையுத்தேசித்துச் செய்யப்படுவதுதான். ஹே தேவ! எவன் உம்மிடம் த்வேஷிக்கிறானோ அவன் என்னையும் த்வேஷித்தவனாகிறான். இது விஷயத்தில் அற்பங்கூட சந்தேகமேயில்லை என்று ஸ்ரீ பகவானிடம் சந்திரசேகரர் மொழிந்திருக்கிறார்.

உபநிஷத்தில்

ये नमस्यन्ति गोविन्दं ते नमस्यन्ति शङ्करम् ।
येऽर्चयन्ति हरिं भक्त्या तेऽर्चयन्ति वृषध्वजम् ॥
ये द्विषन्ति विरूपाक्षं ते द्विषन्ति जनार्दनम् ।
ये रुद्रं नाभिजानन्ति ते न जानन्ति केशवम् ॥

யே நமஸ்யந்தி கோவிந்தம் தே நமஸ்யந்தி ஶங்கரம் ।
யேऽர்சயந்தி ஹரிம் பக்த்யா தேऽர்சயந்தி வ்ருஷத்வஜம் ॥
யே த்விஷந்தி விரூபாக்ஷம் தே த்விஷந்தி ஜநார்தநம் ।
யே ருத்ரம் நாபிஜாநந்தி தே ந ஜாநந்தி கேஶவம் ॥

எவர்கள் கோவிந்தனை நமஸ்காரம் செய்கிறார்களோ அவர்கள் சங்கரனை நமஸ்கரித்தவர்களாகிறார்கள். எவர்கள் ஹரியை பக்தியால் பூஜிக்கிறார்களோ அவர்கள் சங்கரரையும் பூஜித்தவர்களாகிறார்கள். எவர்கள் பரமேசுவரனுக்குத் த்வேஷிகளாகிறார்களோ அவர்கள் ஜநார்த்தனருக்கும் த்வேஷிகளே. எவர்கள் ருத்ரரை அறியவில்லையோ அவர்கள் கேசவரையும் அறியவில்லை என்று ருத்திரோபநிஷத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்த விஷயத்திற்கு இன்னும் பல பிரமாணவசனங்களிருப்பினும் விரிவிற்கஞ்சி இம்மட்டோடு போதுமென விடுத்தனம். இந்தவிஷயமான முற்காலத்தில் நடந்த ஒருகதையுண்டு அதாவது

ஒரு வைணவர் திருப்பதியில் ஸ்ரீ வெங்கடேசப்பெருமானை தரிசிக்க வேண்டி அவரால் அலங்கரிக்கப்பட்ட கிரியை ஏறிச் சென்றார். அவருக்கு சிவத்வேஷம் அதிகமிருந்தது. போகும் மார்க்கத்தில் மத்தியிலிருந்து பார்த்தால் ஒரு சிவாலயத்தின் கோபுரதர்சனம் நேரக்கூடியதாயிருந்தது அந்த இடத்தில் செல்லும்போது சிவத்வேஷியான இந்த வைணவர் தம் கண்ணுக்கு அந்தச் சிவாலயம் புலப்படாமலிருக்க வேண்டி இரு கண்களையும்

இருக மூடிக்கொண்டு சென்றார் அவ்விதமே ஸ்ரீ வெங்கடாசல பதியின் ஸந்நிதி சென்று பகவானை தரிசிக்கவேண்டித் தம் கண் களைத் திறப்பதற்காக எவ்வளவு முயற்ச்சித்தும் முடியவில்லை. பிறகு ஸ்ரீ பகவானைப் பலவாறாகப் பிரார்த்திக்கும்பொழுது ஒரு நாள் அவருக்குக் கனவில்தோன்றி உனக்குச்சிவாபராதம் அதிக மேற்பட்டிருப்பதால் அது விலகினால்தான் நேத்திரம் தெரியுமெ ன்றும் அதற்காக நீர் எந்த சிவாலயத்தைப்பார்க்கக்கூடாதென்று கண்ணை மூடிக்கொண்டீரோ அந்தச் சிவாலயத்திற்குச் சென்று சில காலம் அங்கு வஸித்து அதில் விளங்கும் ஸ்ரீ பரமேசுவரனை நன்கு ஆராதித்தால் அவருடைய அனுக்கிரஹத்தின்பேரில் கண் முன்போல் நன்றாய்த் தெரியுமென்று சொல்லிமறைந்தார். பிறகு அந்த வைணவரும் அவ்விதமே சென்று ஸ்ரீ சங்கரரையுபாஸித்து அவருடைய பிரஸாதத்தால் நேத்திரத்தைப்பெற்று துவேஷ புத் தியை விட்டு இவரிடமும் பக்தியுள்ளவராக இருந்தார் முற்கால த்திலிருந்த பல பெரியோர்களில் சிவபக்தியில் சிலரும் விஷ்ணு பக்தியில் சிலரும் ஈடுபட்டவர்களாயிருந்தபோதிலும் சிவனிடத் திலோ விஷ்ணுவிடத்திலோ துவேஷபுத்தியையும் அப்பிரியத்தை யும் அற்பம்கூட காண்பிக்காமல் தங்களுகத இஷ்டமான மூர்த்தி யை மாத்திரமுபாஸித்து ஸித்திபெற்றிருக்கிறார்கள்.

ஸ்ரீ பரமசிவாதாரமென்று யாவராலும் புகழக் கூடிய மஹி மை பெற்ற ஸ்ரீ அப்பயதீக்ஷிதரவர்கள் ஸ்ரீ ஜயதேவகவி ஸ்ரீ பர்த் ருஹரி, ஸ்ரீ அய்யாவாள் என்கிற மஹான் இவர்கள் யாவரும் முன் கூறியவாறு த்வேஷபுத்தியில்லாமல் ஒவ்வொரு மூர்த்தியை ஒவ்வொருவரும் உபாஸித்து விசேஷமான அனுக்கிரஹத்தைப் பெற்றிருப்பதாக அம்மஹான்களாலிபற்றப்பட்ட கிரந்தங்களால் வெளியாகின்றது. சாஸ்திரங்களும் பெரியோர்களின் அனுஷ் டானங்களும் இவ்விதமிருக்கத் தற்காலத்திலுள்ள சிலர் ஒன்றை யும் கவனியாமல் பகவானிடத்தில் த்வேஷபுத்தியை வைத்துக் கொண்டு ஒருவரைப் பெரியவராகவும் மற்றொருவரைச் சிறியவ ராகவும் தமக்குத் தோன்றியவாறெல்லாம் ஈசுவர நிந்தைசெய்து கொடிய பாபத்திற்குள்ளாகி ஜன்மாவையும் வீணாக்கிக்கொள்கி றார்கள். இவ்விதம் பேதபுத்தியை யடையாமல் அவரவர்களும் இதர தேவதாமூர்த்திகளை தூஷணை செய்யாமல் தமக்குப் பிரிய மான ஒரு மூர்த்தியிடம் பக்தி வைத்து விதிப்படி ஆராதித்து

உத்தமமான சிரேயஸ்ஸைப் பெறவேண்டுமாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உபபத்திராதிபர்.

## பொன்மலையில் பிர்மஸ்ரீ போலகம் சுந்தரசாஸ்திரிகள் அவர்களால் செய்யப்பட்டுவருகிற ஸ்ரீபகவத்கீதோபந்யாஸத்தின் சுருக்கம்.

(671-வது பக்கத்தொடர்ச்சி)

சு. 20-21. அப்படி அனுபவித்துப் புண்ணியம் நசித்தபின் மனுஷ்யலோகத்தைபடைகிறார்கள். பிறந்து மறுபடியும் அந்த லோகத்தை அடைய இச்சைப்படுகிறார்கள். இப்படி போக இச்சையுள்ளவர்கள் பிறப்பிறப்புகளை அடைகிறார்கள்.

சு. 22. அப்படியின்றி வேறொன்றையும் மற்ற தேவதை கர்மா வியவகாரம் முதலியவைகளைக் கவனியாது என்னையே சிந்தித்து இடைவிடாது உபாஸிக்கிறவர்களின் ஸம்பாத்யத்தையும் அந்த ஸம்பாதனத்தை ரக்ஷிக்கிறதும் ஆகிய வியவகாரத்தை நானே வைத்துக்கொள்ளுகிறேன். ஏனெனில் அவர்கள் என் தியானத்தின் வியோகத்தை க்ஷணிகம்கூட ஸஹிக்கமாட்டார்கள். மற்றவர்களின் யோகக்ஷேமத்தை அவரவர்களின் புத்தி விருத்திகளைப் பிரேரணைசெய்து வஹிக்கிறேன். இந்த மஹாத்மாக்கள், அவர்களின் குடும்பங்களையும் யோகக்ஷேமத்தையும் நான் வேறு ரூபம் தரித்தோ அல்லது அந்நியரின் மூலமாக ஸாக்ஷாத்தாக வஹித்துவருகிறேன். இவர்களுக்கு என்னை த்யானம்செய்கிறது தவிர வேறு வியவகாரம் கிடையாது. (இன்னும் வரும்)

வி. என். ராமநாதன்.

## இதுவும் கால வித்யாஸமா?

(600-வது பக்கத்தொடர்ச்சி)

### கன்மாவைச் செய்யும் வகை.

ஆர்யர்களே? நான் முற்கூறியபடி கன்மங்களைப் பற்றிச் சற்று விசாரிக்கத் துடங்குகிறேன், முதலில் பொதுவாய்க் கன்மஸாமான்யத்தின் கால தாரதம்மியத்தையே வரைகிறேன். நமக்கு செய்யும்படி ஏற்படுத்தினகன்மாக்களுக்கு இப்போது கூறு

வது மிகவும் ஆவசியகம். ஆகவே இப்போது பொதுவாய் ஓர் கன்மாவைக் கூறி அதற்குக் காலத்தையும் அதற்கு வேண்டிய ஸாமக்ரீயையும் சொல்லியிருக்கிறுரென்றுவைத்துக்கொள்வோம். அவ்விதம் அக்கன்மாவை அதற்கென்றிடப்பெற்ற காலத்தில் செய்யமுடியாமற் போய்விட்டால் அதை மீண்டும் காலாந்திரத்தில் செய்தாற் பலன் உண்டா. அதற்கு ஏற்பட்ட சாதனம் கிடையாவிடில் முக்கிய காலமாயினும் அதைச் செய்யாது விடலாமா வென்று இம்மாதிரி பலவாறு சங்கை நிகழ இங்குக் கூறுகின்றுர்.

இங்கு காத்தியாயனர்,

मुख्यकाले यदावश्यं कर्म कर्तुं न शक्यते ।
गौणकालेऽपि कर्तव्यं गौणोऽप्येतादृशो भवेत् ॥

ஊவ்யகாலெ யடாவஶ்யம் கமீ கதுூம் நஶக்யதெ ।
஗௭ணகாலெவி கதவ்யம் ஗ௌணொவெ்யதாடிஶொஹவெத்॥

ஏற்பட்ட முக்கிய காலத்தில் எப்போது அவசியமான கன்மாவை செய்ய முடியவில்லையோ அப்போது கௌணகாலத்திலும் அதை செய்யலாம் கௌணமும் அப்போது முக்கியம் போல்தான் பாவிக்கப்படும் என்றுர். இங்கு முக்கிய காலமென்பதற்கு நமக்கு அர்த்தமும் விளங்கிவிட்டது. மற்று கௌணகாலமென்பதின்னதென்று கூறுவிடினும் நாம் ஒருவாறு ஊகித்தறியலாம். அதாவது முக்கிய காலத்தில் செய்யத் தவறிய கன்மாவை கௌணத்தில் செய் என்றதனுல் முக்கிய காலத்திற்கு அடுத்தகாலம் என்றுகிறது. ஸ்மிருதி ரத்னுவளியில் முக்கிய காலத்திற்குப் பிறகு இன்னெரு கன்மாவின் முக்கியகாலம் வருமளவும் இடையிலுள்ள காலம் கௌணகாலம் என்று விரித்துரைத்தார். இத்தகைய கௌணகாலமும் முக்கியகாலம்போல்தான் என்று கூறியதனுல் முக்கியகாலத்தில் கஷ்டப்பட்டுச் செய்யவேண்டாம். கௌண காலத்தில் ஸாவகாசமாய்ச் செய்யலாம். அதாவது அதிகாலையிலெழுந்திருந்து நடுக்கலெடுக்கக் குளிர் நீரில் மூழ்கி அம்முக்கிய காலத்தில்தான் ஸந்தியாவந்தனம் செய்யவேண்டுமென்பதல்ல. மற்று மாத்தியான்னிகத்தின் முக்கியகாலத்திற்குமுன் அதாவது காலை 10-மணிக்கு எழுந்து ஸ்னுனம்செய்து காலைக்கடனைச் சரிவர முடித்துவிட்டு உடனே மாத்தியான்னிகத்தையும் செய்துவிடலாமென்பதற்கல்ல,மற்று முக்கியகாலம்தவறிவிட்டதே நான்

என் செய்வேன் கர்மப்ரஷ்டனானேன் என்று பரிதபிக்கும் ஆஸ்திக கர்மடனைப்பார்த்து அப்பா வருந்தாதே கௌணகாலத்திலும் செய்யலாம். கௌணகாலமும் முக்கியகாலம்போல் தான் என்று அவனுக்கு உத்ஸாகமூட்ட எழுந்ததென்றறியவும். இவ்விதமே நம் கன்மா ஒவ்வொன்றிற்குமே காலங்கள் கூறப்பட்டிருக்கும். ஆனால் அதற்காகப் பிராயச்சித்தப் பிரகரணத்திற் கூறப்பட்டுள்ள பிராயச்சித்தத்தையும் அனுஷ்டிக்கவேண்டும். பகலிலேற்பட்ட கன்மத்தைப் பகலிற் செய்யமுடியாமற்போனல் ராத்திரியின் முதல்யாமபர்யந்தமும் அனுஷ்டிக்கலாமென்று வேறொரு ஸ்மிருதி கூறுகிறது இனி காலமுக்கியமென்பதுபோல் திரவியமும்முக்கியமென்று கூறப்படுகிறதே அங்கு காலம் திரவ்யம் இவ்விரண்டில் எதற்கு அதிக முக்கியமென்பதை கவனிப்பாம்.

मुख्यं कालं समाश्रित्य गौणमप्यस्तु साधनम् ।
न मुख्यद्रव्यलोभेन गौणकालप्रतीक्षणम् ॥

முக்யம் காலம் ஸமாச்ரித்ய கௌணமப்யஸ்து ஸாதநம் ।
ந முக்யத்ரவ்யலோபேந கௌணகாலப்ரதீக்ஷணம் ॥

காலம் முக்கியமாய்க் கிடைக்கும்போது கௌணமும் ஸாதனமாய் இருக்கட்டும். முக்கிய காலத்தில் முக்கிய திரவியம் கிடைக்கவில்லையென்று கௌணகாலத்தில் செய்யக்கூடாதென்று ஸ்மிருதி கூறுவதால் காலம்தான் முக்கியமென்றாயிற்று. இதற்கு திருஷ்டாந்தமாய் இதை கவனித்தால் தெரியும் சிராத்தம் ஒருகிருகஸ்தன் வீட்டில் வருடத்திற்கொருமுறை ஓர் திதியில் வருகிறது. சிராத்தத்திற்கு முக்கிய திரவியமாய்

उच्छिष्टं शिवनिर्माल्यं वान्तं च शवकर्पटम् ।
श्राद्धे सप्त पवित्राणि दौहित्रः कुतपस्तिलाः ॥

உச்சிஷ்டம் சிவநிர்மால்யம் வாந்தம் ச சவகர்படம் ।
ச்ராத்தே ஸப்த பவித்ராணி தௌஹித்ர꞉ குதபஸ்திலா꞉ ॥

பால், கங்கை, தேன், பட்டு, தௌஹித்திரன், குதபம், எள்ளு, என்ற ஏழும் சிராத்தத்தில் பரிசுத்தமானது. அதாவது இவை அவசியம தேவையானதென்பதே. இவை இல்லாவிடில் சிராத்தம் நின்றுவிடாது என்பதே ஆகவே காலம் முக்கியம் என்றேற்

பட்டது. இவ்விதம் காலம்தான் முக்கியமென்பதை இவ்வசனத்தால் நன்கறியலாம்.

आत्मा पुत्रः पुरोधाश्च भ्राता पुत्री पिता सखा ।
इज्यायां सर्वकार्ये च जायन्ते प्रतिरूपकाः ॥

𑌆𑌤𑍍𑌮𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌃 𑌪𑍁𑌰𑍋𑌧𑌾𑌶𑍍𑌚 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑍀 𑌪𑌿𑌤𑌾 𑌸𑌖𑌾 ।
𑌇𑌜𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌚 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌰𑍂𑌪𑌕𑌾𑌃 ॥

யாகத்திலும் தர்மகார்யத்திலும், தான் ஒருவன், புத்திரன், புரோஹிதர், ஸகோதரன், புத்ரி, தகப்பன், தோழன், இவர்கள் பிரதிநிதிகளாவார்கள், அதாவது தான் செய்யவேண்டிய கன்மாவுக்கு ஏதாவது நடுவில் இடையூறு ஏற்பட்டுவிட்டால் மற்ற இவர்கள் பிரதிநிதியாயிருந்து முடிக்கலாமென்றாயிற்று. இதனால் காலத்தைத் தவறவிடக்கூடாதென்பதே உறுதி செய்யப்படுகிறது. இவ்விதம் காலம் தவறினாலும் அன்றே கௌணகாலத்தில் செய்யலாமென்றதனாலும் காலத்திற்கு கௌரவமேற்பட்டது.

இனி வேறொன்றிலிறங்குவாம். இவ்விதம் கன்மாவைச் செய்யவேண்டுமென்று கூறிற்றேயொழிய இன்ன அங்கத்தால் செய்யவேண்டுமென்று விசேஷமாய் ஓரிடத்தும் கூறப்படாததால் வலதுகையால்தான் செய்யவேண்டுமென்ற நியமம் எதற்கு? இடதுகையாலும் செய்யக்கூடாதா. ஓரே தேஹத்தில் பேதமின்றி இருக்கும் அங்கத்திலுமா ஏற்றத்தாழ்ச்சி காட்டவேண்டுமென்றால் அவ்விதமல்ல. தேஹமொன்றில் பேதம் பார்க்கக்கூடாதெனினும் நாம் பேதம் பார்த்து ஒவ்வோரிடத்தில் ஒவ்வோர் அங்கத்தை நியமமாய்க் கட்டுப்படுத்தியிருக்கிறோம். இவ்விதம் கட்டுப்படுத்தியதால் கீழான வேலை செய்யும் அங்கத்திற்கு உபசாரத்தில் குறைவு காட்டமாட்டோம். இரண்டு கையுங்கூடித்தானாக வேண்டுமென்றவிடத்தில் சேர்ந்துதான் வேலை செய்யும். தனியாய்ச் செய்யுமிடத்தில் அத்தை அதது தனியாகவே செய்யும். ஆகவே கன்மவிஷயத்திலும் ஓரே கையாற் செய்யக்கூடிய கார்யத்தை வலக்கையே செய்யும். இடக்கையால் ஏன் செய்யக்கூடாதென்று கேட்பவர்களே முன்வரமாட்டார்கள்? வருவார்களாயின அவர்கள் சொந்த கார்யத்தில் ஒருகையால் செய்கிற நீசகார்யத்தை இன்னொரு வலதுகையாற் செய்தாலென்ன யென்பதற்கு விடையளிக்கக் கட்டுப்படவேண்டும், ஆகவே இது

கேழ்வியே இல்லாவிடினும் இதையும் பொருட்படுத்தி நம் மனு

कुत्सिते वामहस्तस्स्याद्दक्षिणस्यादकुत्सिते ।

குத்ஸிதே வாமஹஸ்தஸ்ஸ்யாத் தக்ஷிணஸ்யாதகுத்ஸிதே ।

என்றும் கூறினர். இம்மாதிரியே எந்த கன்மாவிலும் யக்ஞோபவீதத்துடனேயே செய்யவேண்டும் என்றும் கூறுகிறார். இங்கே மேதாவிகள் சிலர் இவ்விதம் ஊகிக்கின்றனர். ஒவ்வொரு கன்மாவிலும் यज्ञोपवीतिना भाव्यं யஜ்ஞோபவீதிநா பாவ்யம் என்றே சொல்லிவருவதால் எப்போதும் யக்ஞோபவீதத்தைதரித்திருக்க வேண்டிய நியமம் இல்லை. மற்று அவ்வக்காலத்தில் மட்டிலும் தரித்துக்கொண்டால் போதுமெனறேற்படுகிறதென்கிறார். இது அவ்விதம் கொடுக்காது.

सदोपवीतिना भाव्यं सदा बद्धशिखेन च ।

ஸதோபவீதிநா பாவ்யம் ஸதா பத்தசிகேந ச ।

எப்போதும்பூணூலோடிருக்கவேண்டும். எப்போதும் தலைமயிரை முடித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்பதனால் அதை விட்டிருக்க முடியாதென்றேற்படுகிறது. இனி நின்றுகொண்டோ, உட்கார்ந்தோ, நடந்துகொண்டோ, கன்மாவை அனுஷ்டிக்கலாமோவென்றால்

आसीन ऊर्ध्वः प्रह्वो वा नियमो यत्र नेदृशः ।
तदासीनेन कर्तव्यं न प्रह्वो न च तिष्ठता ॥

ஆஸீந ஊர்த்வ: ப்ரஹ்வோ வா நியமோ யத்ர நேத்ருஶ: ।
ததாஸீநேந கர்தவ்யம் ந ப்ரஹ்வோ ந ச திஷ்டதா ॥

நின்றோ உட்கார்ந்தோ வணங்கியோ செய்யவேண்டுமென்ற நியமம் எங்கு கூறப்படவில்லையோ அங்கு உட்கார்ந்து தான் செய்ய வேண்டுமென்று திடப்படுத்துகிறார். இனி எந்த முகமாய் உட்காரவேண்டுமென்று விசேஷமாய்க் கூறப்பட்டிருக்கிறதோ அங்கு அந்தந்த திக்கு தானென்ற நிச்சயம் உண்டெனினும அவ்விதம சொல்லாதவிடத்து யாது செய்யலாமென்றால் அங்கு வடகிழக்கு ஈசான மூலை மூன்றையும் நோக்கிச் செய்யலாமென்று காத்தியாயனர் கூறுகின்றனர். ஒவ்வொருகன்மாவை செய்யுமுன் அவனது மனது தெளிந்த நிலையில் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். எப்போதும் ஸத்தியமே பேசுபவனாய் இருக்கவேண்டும். ஸ்னான

பக்தியுடன் செய்யவேண்டும். இவ்வளவோடு கன்மாரம்பத்தில்
பக்தியுடன் ஆசமனத்தை அவசியம் செய்யவேண்டும். இவ்வி
தம் ஆரம்பிக்கப்படும் கன்மா விசேஷ பலனையளிக்குமென மகரி
ஷிகளின் அபிப்பிராயம். ஒவ்வொரு கன்மாவின் ஆரம்பத்திலும்
இந்த கன்மாவைசெய்யப்போகிறேனென்று ஸங்கல்பம் அவசியம்
வேண்டும். அவ்விதம் ஸங்கல்பம் செய்யப்பட்டால் தான் பலன்
தருமென்பதும் பெரியோர்களின் அபிப்பிராயம். இனி பிரதா
னமாய் ஓர் கன்மா ஆரம்பிக்கும்போது அதற்கு அங்கமான சில
கன்மங்கள் நடுவில் ஏற்படும். அவைகளில் அங்கங்கு அனுஷ்
டிக்கப்பட்டால் தான் பலன் தரும். இல்லாவிடில் பிராயச்சித்தம்
செய்தே தீரவேண்டுமென்று ஆசுவலாயனர் கூறுகின்றனர். கன்
மாவை ஆரம்பித்து முடித்தபிறகு தெரியாத்தனத்தால் அதுவேறு
விதமாகச் செய்யப்பட்டு விட்டதென்று தோன்றினால் மறுபடி
யும் அக்கன்மாவை திரும்பச் செய்யவேண்டும். எந்தவிடத்தி
லிருந்து மாறியதோ அந்த இடம நிச்சயமாய் ஞாபகத்திற்கு வந்
தால் மாறினவிடத்திலிருந்து செய்தால் போதும் என்றும் கூறு
கின்றனர். மற்று சிலருக்கு சில கன்மம் விஸ்தாரமாய்க் கூறப்
பெற்றும் சிலருக்குச் சுருக்கமாயும் இருக்கிறது. இதனால் ஆஸ்
திகனாய் இருப்பவன் अधिकस्याधिकं फलं அதிகஸ்யாதிகம் பலம்
அதிகத்திற்குப் பலன் அதிகமென்ற நியாயத்தைக் கைக்கொண்டு
தனது ஸூத்திரக்காரர் கூறிய சுருக்கத்தைத் தள்ளிவிட்டு விஸ்
தாரமாய் இருப்பதை அனுஷ்டித்தால் அதனால் அவனுக்கு அப்
பலனேற்படாததோடுமட்டிலுமில்லாமல் தனது ஸூத்திரக்
காரரை அவமதித்த தோஷத்தையும்பெறுவான். சிரௌத கன்மா
வில் மட்டிலும் எல்லாசாகைகளிலும் இருக்கிற விசேஷத்தை
அனுஷ்டிக்கலாம். மத்நதில் அன்னியமம் எறுது. ஸ்மிரு
த்யர்த்த ஸாரத்தில் எந்த ஜபவிதியிலாவது கன்மானுஷ்டான விதி
யிலாவது திக்கு சொல்லபடவில்லையோ அங்கு கிழக்கு வடக்கு
வடகிழக்கு இந்த திக்கைப் பார்த்துக் கன்மானுஷ்டானம் செய்ய
லாமென்கிறார். ஆனால்

अप्रवाहोदकस्नानं विप्रपादावनेजनम् ।
गायत्रीजपमर्घ्यं चाप्यादित्याभिमुखश्चरेत् ॥
அப்ரவாஹோதகஸ்நாநம் விப்ரபாதாவநேஜநம் ।
காயத்ரீஜபமர்க்யம் சாப்யாதித்யாபிமுகஶ்சரேத் ।

பிரவாஹமாய் இல்லாத ஜலத்தில் ஸ்நாநம் செய்யும்போதும் பிராமணரது பாதப்பிரக்ஷாளனம் செய்யும்போதும் காயத்ரீ ஜபம் செய்யும்போதும் அர்க்கியம் கொடுக்கும்போதும் ஸூர்யனை நோக்கிச் செய்யவேண்டுமென்றிருப்தால்தான் சாயங்கால ஸந்தியிலும் ஜபத்திலும் மேற்கு திக்கைப்பார்த்தே அநுஷ்டிக்கிறோம். மற்று வடக்கு நோக்கியே இதிருக்கட்டும். எங்கு நின்று கொண்டோ வணங்கியோ என்று சொல்லவில்லையோ அங்கு உட்கார்ந்துதான் அநுஷ்டிக்கவேண்டும். இவ்வளவால்கர்மாநுஷ்டானத்திற்கு முக்கிய காலத்தையும் கௌணகாலத்தையும் கூறினர். கௌணமும் முக்கிய காலம்போல் பலனுள்ளதுதானெனப் புகழ்ந்தார். ஆனால் கௌணானுஷ்டானம் சரியல்லவென்று முன்னற் கூறினேன். அதற்கிணங்க.

प्रभुः प्रथमकल्पस्य योऽनुकल्पेन वर्तते ।
स नाप्नोति फलं तस्य परत्रेति श्रुतिस्मृती ।
न साम्परायिकं तस्य दुर्मतेर्विद्यते फलम् ॥

𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑌕𑌲𑍍𑌪𑌸𑍍𑌯 𑌯𑍋𑌽𑌨𑍁𑌕𑌲𑍍𑌪𑍇𑌨 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌸 𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌫𑌲𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌤𑍍𑌰𑍇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑍀 ।
𑌨 𑌸𑌾𑌮𑍍𑌪𑌰𑌾𑌯𑌿𑌕𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌦𑍁𑌰𑍍𑌮𑌤𑍇𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌫𑌲𑌮𑍍 ।

முக்கிய கல்பத்தை அநுஷ்டானம் செய்ய சக்தி வாய்ந்த ஒருவன் கௌணகல்பத்தை அநுஷ்டித்தானேயானால் அதனுடைய பலன் கிடையாதென்று சுருதிஸ்முருதிகளினபிப்பிராயம். புத்தி கெட்ட அவனுக்குப் பரலோக பலனே கிடையாது என்றார். இதனால்தான் ஆஸ்திககர்மடர்கள் கர்மாநுஷ்டானத்தின் முக்கிய காலத்தைக் கூடிய மட்டிலும் தவறவிடாது கவனித்து அதிலேயே அநுஷ்டிப்பார்கள். அத்தகையோர்கட்கு தைவவசத்தாலோ சரீரஸ்வாதீன மின்மையாலோ கௌணகாலத்திலநுஷ்டிக்க நேர்ந்தால் அவர்கள் மிகவும் பச்சாத்தாபமடைவார்கள். இனி சிலர் சில கன்மங்களை வித்யாஸமாக அநுஷ்டிக்கின்றனர். ஏன் இவ்வித மநுஷ்டிக்கின்றீரென்று கேட்டால் எங்கள் தேசானுஷ்டானம் அல்லது ஜாதிமுறையின் அநுஷ்டானம் அல்லது குலதர்மம் என்று பலவாறு கூறுகின்றனர். இவ்விதமநுஷ்டிப்பதை நம்சுருதிஸ்மிருதி எம்மட்டு ஏற்கிறதென்பதை கவனிப்பாம்

(தொடரும்) எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.

# திருவாளப்புத்தூர் க்ஷேத்ரம்.

திருவாளப்புத்தூர் என்று வழங்கும் இக்கிராமம் வைதீஸ்வரன்கோயில் ரயில்வேஸ்டேஷனிலிருந்து மேற்கே போகும் பப்ளிக் ரஸ்தாவில் 7-மையில் தூரத்தில் உள்ளது. இது ஒரு சிவ க்ஷேத்திரம். நால்வர் பாடலில்இருவரால் பாடப்பட்டது. ஸ்வாமி பெயர் ஸ்ரீ ரத்தினபுரீச்வரர். அம்மன் பெயர்—ப்ரமாகுந்தளாம்பாள்.

இந்த க்ஷேத்திரத்தில் மஹிஷாஸுரனை ஸம்ஹரித்த பராசக்திக்கு பிரும்மஹத்தி நிவர்த்தியாய் ஈசுவரனை ஆராதித்து வாமபாகம் பெற்றிருக்கிறாள். இந்த இடத்தில் ஸ்ரீ துர்க்காம்பாள் ஸன்னதி மிகவும் விசேஷம். பிரதி சுக்கிரவாரம் மங்களவாரம் முதலிய தினங்களில் ஸர்வ ஜனங்களும்வந்து ஸ்ரீ அம்பாள் தர்சனம்செய்து அவர்களுடைய மனோபீஷ்டங்களையும் நிறைவேற்றிக் கொண்டு போய்க்கொண்டிருக்கிறார்கள். ஸ்தலவிருக்ஷம்—சிரீஷம் (வாகை) தீர்த்தங்கள்மூன்று. 1. பிரம்ம தீர்த்தம். 2. தண்டதீர்த்தம். 3. சக்ரதீர்த்தம்.

ஸ்ரீ மஹாலிங்கத்தைப் பூஜித்தவர்கள்:—

1. குசகேது. 2. ஹம்ஸகேது. 3. அர்ஜுனன். 4. பிரம்மா. 5. மஹாவிஷ்ணு. 6. ஆதிசேஷன். 7. ஸ்ரீ துர்க்காம்பாள். 8. ப்ரமரம்.

க்ஷேத்திரத்தின் நாமதேயங்கள்:— 1. வல்மீகபுரம். 2 சிரீஷ்வனம். 3. கதலிவனம். 4. ரத்தினபுரீ. 5. துர்க்காபுரம். 6. தர்காலம் வழங்கும்பெயர் (திருவாள் ஒளிப்புத்தூர்). அர்ஜுனனுடைய வாளை ஒளித்ததால் ஷை க்ஷேத்திரத்தில் நவராத்திரி உத்ஸவம் ஸ்ரீ துர்க்காம்பாளுக்கு வெகு விமரிசையாக நடைபெற்றது. தினந்தோறும் திரளான ஜனங்கள் வந்து ஸ்ரீ தேவியை தர்சனம்செய்து ஸர்வாபீஷ்டங்களையும் பெற்றுக்கொண்டு போனார்கள். நவராத்திரி உத்ஸவமாகப்பட்டது. பிரம்மாவால்செய்த பிரம்ம உத்ஸவத்தின் சிறப்பாக விளங்கியது. ஷை க்ஷேத்திரத்தில் இவ்வளவு தூரம் நடந்ததானது ரொம்பவும் ஸந்தோஷத்தைத் தரத்தக்கது.

ஆனால் இந்த க்ஷேத்திரத்தில் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் அவசியம் சீக்கிரத்தில் நடைபெறவேண்டும். தற்காலம் க்ஷேத்திரத்தில் முக்கியமாய் செய்யவேண்டிய திருப்பணிகள்

நடந்துகொண்டிருக்கிறது. கும்பாபிஷேகமும் நடத்துவதாகபிரஸ்தாபங்களும் நடந்துகொண்டிருக்கிறது. ஷை காரியங்களை மிகவும் ஊக்கத்துடன் நடத்திவரும் பிள்ளைமார்களுக்கும் பஞ்சாயித்தார்களுக்கும் கிராமக்குத்தகைதாரர்களுக்கும் ஸ்ரீசந்திரமௌளீசுவர அனுக்கிரஹத்தாலும் ஆசாரியாளுடையபக்திப்ரபாவத்தாலும் தீர்காயுளாய்இருந்து மேன்மேலும் அபிவிருத்தியாய் ஈசுவரனுக்குக் காலந்தவறாமல் காலங்களை நடத்திக்கொண்டும் நிறுத்திவைத்திருக்கும் பிரம்மோத்ஸவத்தை நடத்தியும் அதிசீக்கிரத்தில் அஷ்டபந்தனமும் செய்து கலியினுடைய செய்கைகளை பக்தியினால் ஜெயித்துவரும்படிக்கு ஆசார்யாளுடைய அனுக்ரக பலத்தால் நடக்கவேண்டுமாயும் பிரார்த்திப்பதுடன் ஆர்யதர்ம மூலமாக இதை பிரசுரம்செய்தால் எனனுடைய மனதிலிருக்கும் அவா நீங்கும் என்று ரொம்பவும் நமஸ்கரித்துக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏ ஜகதீசய்யர்.

---

## காந்தியடிகள் கூறும் விதவாமறுவிவாகத்திற்கு வங்காளப்பள்ளி ஆசாரியரின் மறுப்பும், அதற்கு காந்தியவர்கள் தமது "யங் இந்தியா" வில் கூறும் சமாதானம் சரியல்லவென்பதும்.

(633-வது பக்கத்தொடர்ச்சி)

ஈண்டு மற்றோர் விஷயமும் கவனித்தற்பாலது. இவ்வுலக சிருஷ்டியில் ஆண் பெண் ஜனசங்கியைகள் சமமாகவில்லாது ஏறக்குறைவாக விருப்பதே பிரம சிருஷ்டியின் இயற்கை அதிலும் தற்காலம் நமது பாரதநாட்டிலுள்ளதுபோல், ஸ்திரீசமூகத்தின் தொகை மேலிட்டு நிற்குமேல், வங்காளப்பள்ளியாசிரியர் கூறியுள்ளபடி நமது பெண்மக்களுக்குத் தக்க ஆடவரைத்தேடி மணஞ்செய்விப்பது மிக்க சிரமமாகவும் பெருத்த ஆலோசனைக்கிடமாகவும் ஆய்விடுகின்றது. அவ்விதமின்றி புருஷர்களின் ஜனசங்கியைமேலிடுமேல், ஒவ்வொரு ஆண்மகனும் இல்லறத்திற் புகுந்து கிருஹஸ்த தர்மத்தைப் பின்பற்ற வழியின்றி ஆகிவிடும். அது கொண்டே கருணைவள்ளல்களான நமது மஹான்கள் ஒவவொரு ஆண்மகனும் பெண்மணியும்இல்லறத்தையனுஷ்டிப்பதற்கு இடந்தால் வேண்டுமெனக் கருதி ஸ்திரீகள் ஓர் தாமே விவாகஞ்செய்து கொள்ளவேண்டுமென விதித்தது. அதிலும் புருஷர்களுக்கு விவா

கமெனும் இச்சம்ஸ்காரம் காமியம் ஸ்திரீகளுக்கோவெனில் அது நித்தியம். இதற்குக் காரணமும் ஜீவசக்தியாத்மமான ஸ்திரீ புருஷ சிருஷ்டிகளுள் முன்பகுதியினர்களான ஸ்திரீகளே அபலைகளானதால் (The weaker sex) அவர்கள்.

बाल्ये पितुर्वशे तिष्ठेत् पाणिग्राहस्य यौवने ।
पुत्राणां भर्तरि प्रेते न भजेत् स्त्रीस्वतन्त्रताम् ॥

பால்யே பிதுர்வஶே திஷ்டேத் பாணிக்ராஹஸ்ய யௌவனே ।
புத்ராணாம் பர்தரி ப்ரேதே நபஜேத்ஸ்த்ரீஸ்வதந்த்ரதாம் ॥

என்றவான்றோர் திருமொழிகட்கிணங்க பிறர் போஷணையிலேயே இருக்கவேண்டியவர்களென்பதாம் எனவே அவர்கட்கு விவாகம் நித்தியமெனச் சாற்றப்பட்டுள்ளது இவ்விதம் விவாகம் பெண்மக்களுக்கு அவசியம் செய்தே தீரவேண்டுமெனவும் அவர்கட்கு இல்லறமல்லது நல்லறமென்றனவும் நமது சாஸ்திரங்கள் தெளிவுறப் புணர்த்தி ஆண்மக்களுக்கு ஏகபத்நி விரதத்தையும் பெண்மக்களுக்கு பதிபக்தியையும் விதித்தோதியது. பக்தியிலக்ஷணம் கூறுங்காலும் சாசுவதமான அப்பரஞ்சோதியிடத்து என்றும் நிலைத்து நிற்கும் அளவற்றபிரேமையையும் விசுவாசமுமே உண்மை பக்தியெனத் தீட்டிக்காட்டப்பட்டுள்ளது. உலகமாதாவான சீதாபிராட்டியாரின் ஒப்புயர்வற்ற பதிபக்தியைக் கூறும் காலையும் கவிதிலகமான எமது வான்மீகிமுனிவர் छायेव अनुगता सदा ச்சாயேவ அநுகதா ஸதா என்ற மேன்மை தங்கிய பதங்களைப் பிரயோகித்து நிழலைப்போல் பதியைப் பின்பற்றும் பான்மையுடையாள் என வெகு அழகாக மொழிந்தனர். எனவே முதன் முதலில் கொண்ட புருஷனிறந்ததும மறுமணங் கொள்வதென்பது உண்மையில் பதிபக்தியுள்ள மனைவியின் இலக்கணமாகமாட்டாது. அதுகொண்டே

न द्वितीयश्च साध्वीनां कश्चिद्भर्तोपदिश्यते ।

நத்விதீயஶ்ச ஸாத்வீநாம் கஶ்சித்பர்தோபதிஶ்யதே என்றுமனுவும்

न तु नामापि गृह्णीयात् पत्यौ प्रेते परस्य तु ।

ந து நாமாபி க்ருஹ்ணீயாத் பத்யௌ ப்ரேதே பரஸ்ய து ।

தான் கொண்ட புருஷன் இறந்தக்கால் பிறபுருஷனின் பெயரையும் உச்சரித்தற் தகாது என மற்றொரு ஸ்மிருதிகர்த்தரும் ஐயந்தெளியக் கூறியது. இதுபோலவே ஆச்வலாயன மகரிஷியும்

अज्ञातश्च द्विजो यस्तु विधवामुद्वहेद्यदि ।
परित्यज्य च तां चैव प्रायश्चित्तं समाचरेत् ॥

அஜ்ஞாதஶ்ச த்விஜோ யஸ்து விதவாமுத்வஹேத்யதி ।
பரித்யஜ்ய ச தாஞ்சைவ ப்ராயஶ்சித்தம் ஸமாசரேத் ॥

என்ற வசனங்களால் அறியாமையினுல் விதவையைக் கொள்ளும் துவிஜன் அப்பாபத்தைத் தொலைக்கவேண்டிப் பிராயசித்தம் செய்யக்கடவன் எனப் புருஷர்களுக்கும் விதித்தனர்.

இதுமட்டோ! விவாகமெனும் இச்சம்ஸ்காரமும் "கன்னிகா தானம்" என்ற வடமொழிச் சொற்களால் தற்காலமும் வழங்கப் பட்டு வருகின்றது. "कन्यां कनकसम्पन्नां கந்யாம் கநகஸம்பந்நாம்" என்ற ஆன்றோர் திருமொழிக்கிணங்க திவ்யாபரண பூஷிதை யான தனது பெண்மணி கன்னிப்பருவம் நீங்கி இல்லற தருமம் நடத்தவென தக்கதோர் வரனைத்தேடி அவனுக்கு அக்கன்னிகை யைத் தானஞ்செய்து ஒப்படைத்தபின்னர் தானமாகக்கொடுக்கப் பெற்ற அக்கன்னிகையை, புருஷன் பாத்தியமடைந்ததும் பிறருக் குத் தானம் வழங்கமுடியுமா? தானம் வழங்கியபின்பே அப் பொருளின் பாத்தியதையை அவன் இழந்துவிட மீண்டும் அதையே பிறருக்குத் தானஞ் செய்வதென்பது நமது சாஸ்திரங் களின் கொள்கைகட்கு மாத்திரமன்றி உலக நடவடிக்கைக்கும் ஒவ்வாததாகவன்றே இருக்கிறது எனவே முற்கூறிய காரணங்க ளால்விதவைகளுக்கு மறுவிவாஹம்கூடாதென நன்கு புலப்படும்.

இனி பால்யவிதவைகளின் மறுமண விஷயத்தைப்பற்றிச் சற்று விசாரிக்கின்றோம். நமது காந்தியடிகளும் பொதுவாக விதவைகளின் மறுவிவாகப் பிரசாரத்தோடு நில்லாது, அவர்களை விருத்த விதவைகளென்றும் பால்யவிதவைகளென்றும் இருதிறத் தினராக வகுத்து, முதற்பகுதியைச் சார்ந்த விருத்தவிதவைகள விஷயத்திற்றான் அவ்வளவாக அநுதாபப்படவில்லை யென்றும், இல்லறவாழ்க்கையென்பதும் பிர்மசர்யமென்பதும் இத்தகைத் தெனவறியாது மிகச் சிறுவயதிலேயே வைதவ்யமெனும் கொடிய துக்கத்திற்குள்ளான பால்ய விதவைகளின் விஷயத்தி லேயே மிகவும் பரிதாபப் படுவதாகவும் சாற்றுகின்றார். அது மாத்திரமன்று. அச்சிறுமிகளை விதவைகளென்று விவகரிப்பதே தவறென்றும், அவர்களனுபவிக்கும் சகிக்கவொண்ணுத் துன்

பத்தை நிவர்த்திப்பது காருண்யமுள்ள ஒவ்வொரு இந்துவின் கடமையெனவும் அதுபற்றியே பச்சையப்பன்கல்லூரி மாணவர் தமக்குப்புகட்டிய புத்திமதியையே தான் மீண்டும வற்புறுத்துவ தாகவும் சொல்லியிருக்கின்றார்.

ஐய! இதுவே எமக்குப்பெரும் வியப்பை உண்டாக்குகின் றது. இவ்விதம், பால்யவிதவைகளென்றும் வயதுசென்ற வித வைகளென்றும் ஓர் வித வரையரையை எமது காந்தியடிகள் எவ் வித ஆதாரங்கொண்டு ஏற்படுத்துகின்றார்களோ தெரியவில்லை. வயதின் பரிமாணத்தைக்கொண்டா? அல்லது. பருவமடைதற்கு முன் புருஷனை யிழந்தவர்கள பால்யவிதவைகளா? அல்லது சம போகமேற்படுமுன்னர் பதியையிழந்தவர்கள் பால்ய விதவை களா? அதுவுமின்றேல் மககட்பேறு அடைவதற்கு முந்தியே கணவன் இறந்துவிட்டால் அவர்கள் பால்ய விதவைகளா? முற் கூறிய நான்கு காரணங்களுமில்லாவிடில், இவ்வுலக இன்பத்தில் பறறுள்ளவரை பால்ய விதவைகளெனக் கருதவேண்டியதுதானு அல்லாது இவற்றைக்காட்டிலும் வேருன மற்றுமோர் ஆதாரம் உளதா?

வயதின் பிரமாணத்தை ஒட்டியோவெனில் குறிப்பிட்ட ஓர் வயதுகாலத்திற்குள் பலர் சந்தானமெனும் அருட்செல்வத்தைப் பெற்றிருக்கக்கூடும். அக் குறித்த வயதைத் தாண்டி பதியை இழக்க நேரிடும். பால்ய விதவைகளிற் பலர் மககட்பேறு அடையாதிருத்தலும் இயல்பே. இவ்விதமிருக்குங்கால், முன் திறத்தினருககே மறுமணஞ் செய்விககவேண்டுமென்பதும் பின் திறத்தினருக்கு வேண்டுவதில்லையெனவும் கூறுவது யுக்திப் பிர மாணத்திற்கும் ஒவ்வாததாகவன்றே இருக்கின்றது. பருவ காலத்திற்கு முன் என்ற பிரமாணத்தை அங்கீகரிப்போமாயினும் பதினைந்து பதினாறு வயதிலும் பருவமடையாது கணவனையிழந்த மங்கைக்கு விவாகஞ்செய்விக்க, 12, 13 வயதிலேயே பருவம டைந்த துர்ப்பாக்கியவதிகள் மறுமணத்திற்கு வகையின்றித்தவிக் கும் இத்தகைய பிரமாணம் எவ்வளவு அழகாயிருக்கின்றது பாருங்கள்! மூன்ருவதாக சமபோகமேற்படுவதற்கு முன் என்று கூறுவதும் பொருந்தாது. (இன்னும் வரும்)

ப. வ கணபதி சாஸ்திரி.

---